STC.No. 502/2024
நாள் 01.12.2025.
D.W.1 – (பீம்சிங் )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **முதல் விசாரணை**

21.01.2021 அன்று நான் ரூ.11 லட்சம் கடன் இஸ்ரவேலிடம் இருந்து வாங்கியிருந்தேன். அந்த தொகைக்கு மாதம் ரூ.33,000/– விகிதம் வட்டி செலுத்துவேன். என்னுடைய வங்கி கணக்கில் இருந்தும் வடிவேல் அழகர் வங்கி கணக்கில் இருந்தும் மாதம் மாதம் வட்டி செலுத்தினேன். ஒரு ஆண்டு காலம் தொடர்ச்சியாக வட்டி செலுத்திவந்தேன். அதன்பின், வட்டி செலுத்த முடியாது எனச் சொல்லி அசல் தொகையை தருவதாக சொல்லியிருந்தேன். 05.01.2022 அன்று நான் நடத்திய சீட்டில் நான் 4 சீட்டுகள் என் பெயரில் போட்டிருந்தேன். நான் அந்த சீட்டில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2022ம் ஆண்டு மாதம் தலா ரூ.2 லட்சம் எடுத்து மாதம் மாதம் இஸ்ரவேலிடம் ரூ.2 லட்சம் என மொத்தம் ரூ.8 லட்சம் கொடுத்துவிட்டேன். பாக்கி ரூ.3 லட்சத்தை நான் அசலில் கழிக்குமாறு சொன்னேன். இஸ்ரவேல் வட்டியில்தான் கழிப்பதாக சொன்னார். அதனால் வாக்குவாதம் ஏற்பட்டது. ரூ.2,50,000/– அசலில் கழித்துவிட்டு பாக்கி ரூ.50,000/–த்தை வங்கி வரைவோலை எடுத்து வழக்கறிஞர் மூலமாக இஸ்ரவேலுக்கு அனுப்பினேன்.

நான் வட்டி தொகை அதிகமாக இஸ்ரவேலிடம் கொடுத்திருந்தேன், அந்த அதிகமாக செலுத்திய தொகையை ரூ.2,50,000/– அசலில் கழித்துக் கொண்டேன். அதன்பின் பாக்கி ரூ.50,000/– வங்கி வரைவோலையாக செலுத்தினேன். நான் மொத்தம் 2 காசோலைகள் இஸ்ரவேலிடம் கொடுத்திருந்தேன். அவற்றுள் ஒன்றை புகார்தாரரும் மற்றொன்றை இஸ்ரவேல் என்பவரும் வசூலுக்கு தாக்கல் செய்து பவுண்ஸ் செய்தார்கள்.

நான் புகார்தாரரிடம் ரூ.6 லட்சம் 2021ம் ஆண்டு வாங்கியிருந்தேன். தேதி நினைவில்லை. நான் மாதம் மாதம் அசல் மற்றும் வட்டியை புகார்தாரரின் மனைவியின் வங்கி கணக்கில் செலுத்திவிட்டேன். நான் புகார்தாரருக்கு இறுதியாக ரூ.3,50,000/– தொகை கொடுக்கவேண்டி இருந்தது. சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் நான் புகார்தாரருக்கு எதிராக புகார் கொடுத்திருந்தேன். அவர் என் மனைவிக்கு போன் செய்து தவறாக வார்த்தை பேசினார் அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். நான் ரூ.3,50,000/– கொடுக்கவேண்டும் என்றும், 20 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று எழுதி வாங்கிக் கொண்டு, சிஎஸ்ஆர் வழங்கினார்கள். நான் 20 நாளில் புகார்தாரரிடம் அசல் தொகை ரூ.3,50,000/–த்தை புகார்தாரரிடம் கொடுத்துவிட்டேன். இஸ்ரவேல் என்பவருக்கு கொடுக்கவேண்டிய கணக்கை முடித்தவுடன் காசோலையை தருவதாக சொன்னார். இருவரும் வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள்.

## <u>குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.